29.10.2024

O.S.No.

வா.சா.4 திரு.விஜயகுமார் த.பெ.குப்புசாமி

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**குறுக்கு** விசாரணை

1. **நான்** BSC **பட்டதாரி ஆவேன். நான் மதுரை வில்லாபுரத்தில் வசிக்கிறேன். தாவா சொத்து காலியிடமாக உள்ளது என்றால் என்னுடைய சொத்து மட்டும் கல் ஊன்றப்பட்டு உள்ளது, மற்ற இடங்கள் எல்லாம் காலியிடமாக உள்ளது. எனது சொத்தில் கல் ஊன்றப்பட்டு உள்ளதாக சொல்வதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கு உள்பட இதோடு இணைந்த மற்ற** 12 **வழக்குகளிலும் நான் தரப்பினர் அல்ல என்றால் சரிதான், எனது மனைவி வைஷ்ணவி இந்த நீதிமன்றத்தில் எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை, ஆனால் உயர்நீதிமன்றத்தில் வழகககு தாக்கல் செய்துள்ளார். அவ்வாறு எனது மனைவி தாக்கல் செய்துள்ள வழக்கு தொடர்பான ஆவணங்கள் எதுவும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது முதல் விசாரணையில் அய்யனார் என்பவர் இளம்ஜி சௌந்திரராஜன் என்பவரிடம் இருந்து கிரையம் பெற்ற சொத்துக்களில்** 10 **பிளாட்டுகளை பொறுத்து மட்டும் அயுப்கான் என்ற அம்சத்கான், அய்யனார் பவர் பத்திரம் பதிந்து கொடுத்துள்ளதாக நான் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். அந்த பவர் பத்திரத்தினை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.**

2. **எனது மனைவி கிரையம் பெற்றதாக சொல்லப்படும் கிரைய ஆவணத்தினையும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தினை பொறுத்து** 20.04.1996**ம் தேதிய அய்யனார், இளம்ஜி சௌந்திரராஜன் என்பவரிடம் இருந்து கிரையம் பெற்றதாக சொல்லப்படும் கிரைய ஆவணத்தினை மதுரை மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில்** Adjudication **செய்வதற்கு நான் மனு கொடுத்ததாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். அந்த மனு எனது பெயரில்தான் கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்படி மனுவானது நீதிமன்ற உத்தரவில்லாமல் தன்னிச்சையாகதான் கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த மனுவில் விசாரணையில் அந்த** 20.04.1996 **தேதியிட்ட கிரைய பத்திரம் பதிவு செய்யப்பட்ட கேரளா மாநிலம் பாறசாலை சார்பதிவாளர் அலுவலகத்தில்**

அந்த கிரைய ஆவணத்திற்கான உண்மை தன்மையை மதுரை மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் பெற்றார்கள்.

3. நான் கொடுத்த மனுவின் அடிப்படையில்தான் விசாரணை செய்யப்பட்ட பின்பு கேரளா மாநிலம் பாறசாலை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு 20.04.1996 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் உண்மை தன்மையை கேட்கப்பட்டது என்றால் சரிதான். அந்த விசாரணையில் இந்த பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு எதுவும் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் இருந்து கொடுக்கவில்லை என்றால் சரிதான். நானும் தனிப்பட்ட முறையில் அறிவிப்பு எதுவும் பிரதிவாதிக்கு கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் மதுரை மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் மேற்கூறியவாறு மனு கொடுத்த போது 20.04.1996 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் நகலைதான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். நான், அய்யனாருக்கு அறிவிப்பு எதுவும் தரவில்லை என்றால் சரிதான், அவர் அதற்கு முன்பு இறந்து விட்டார். அம்சத்கான் பவர் பத்திரம் பெற்றதாக சொல்லப்படும் 10 பிளாட்டுகளில் எந்த பிளாட்டினை குறிப்பிட்டு எனது மனைவி கிரையம் பெற்றார் என்று எனது முதல் விசாணையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

4. மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் எனது மனைவியின் கிரைய பத்திரத்தின் நகலை தாக்கல் செய்திருந்தேன். மேற்படி சங்கதியை எனது முதல் விசாரணையில் சொல்லாமல் இந்த வழக்கிற்காக புதியதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 20.04.1996 தேதியிட்ட கிரைய பத்திரத்தினை ஆரம்ப காலம் முதல் பிரதிவாதிகள் ஆட்சேபணை செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல, 2014க்கு பின்னிட்டு தான் ஆட்சேபணை செய்து வருகிறார்கள். அவ்வாறு 2014ம் ஆண்டுக்கு பின்பு பிரதிவாதிகள் ஆட்சேபணை செய்து வருவதாக நான் சொல்வதால் அய்யனார் கிரையம் பெற்றதாக சொல்லப்படும் கிரைய ஆவணம் உண்மையானதா இல்லையா என்பதனை அறிந்து கொள்வதற்கு நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான், நான் வேலி போடும் வரை எந்த பிரச்சினையும் இல்லை என்பதால் நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அய்யனார் கிரையம் பெற்றதாக சொல்லபபடும் 20.04.1996 கிரைய ஆவணத்தில் இஎம்ஜி சௌந்திரராஜன் கையொப்பம் இல்லை என்று ஆட்சேபிப்பதால் அந்த கையொப்பத்தினை

நிருபிப்பதற்கு கையெழுத்து நிபுணருக்கு அந்த ஆவணத்தினை அனுப்ப மாவட்ட பதிவாளர் நடவடிக்கை எடுத்தாரா என்றால் எனக்கு தெரியாது.

5. Ex.C2ல் உள்ள விவரம் எனக்கு தெரியும். அதில் 20.04.1996 தேதியிட்ட கிரைய ஆவணத்தினை கையெழுத்து நிபுணருக்கு அனுப்பியுதாக எந்த குறிப்பும் இல்லை என்றால் சரிதான். மேற்படி கிரைய ஆவணத்தின் அசலை பார்த்தால்தான் இளம்ஜி சௌந்திரராஜன் கையொப்பம் உள்ளதா என்பதனை காணமுடியும் என்றால் சரிதான். கேரளா மாநிலத்தில் தமிழ்நாட்டில் உள்ள சொத்தினை பதிய வேண்டும என்றால் அந்த நபருக்கு கேரளா மாநிலத்தில் சொத்து இருந்ததால் தான் அங்கு பதிய முடியும் என்றால் சரிதான். இளம்ஜி சௌந்திரராஜனுக்கு கேரளா மாநிலம் பாறசாலையில் சொத்து இருந்ததாக காண்பிப்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் அவர் அங்கு ஒரு செண்டு நிலத்தினை வாங்கி இங்குள்ள சொத்தினையும் சேர்த்து கிரையம் செய்தார். அந்த ஒரு செண்டுநிலத்தினை நேரடியாக சென்று விசாரித்து தெரிந்துகொள்ளவில்லை என்றால் சரிதான். நான் கூறுவது போல் இளம்ஜி சௌந்திரராஜனுக்கு கேரளா மாநிலம் பாறசாலையில் ஒரு செண்டு நிலம் எதுவும்கிடையாது என்றாலும், அவர் அய்யனாருக்கு 20.04.1996 தேதியில் எந்த கிரைய ஆவணமும் எழுதி கேரளா மாநிலம் பாறசாலையில் உள்ள சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிந்து கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அய்யனார் மோசடியாக இளம்ஜி சௌந்திரராஜன் கையொப்பத்தினை உற்பத்தி செய்து, தாவா சொத்தினை பொறுத்து கிரைய சொத்தினை கேரளா மாநிலம் பாறசாலையில் பதிந்து கொடுத்தார் என்றால் சரியல்ல.

6. அய்யனார் 2017-2018 ஆண்டுகளில் இறந்துபோனார். அய்யனாரை நான் நேரில் பார்த்துள்ளேன். எனது மனைவி கிரைய பத்திரம் பதிவு செய்யும் போது அவர் வந்திருந்தார். அப்போது 20.04.1996 தேதியிட்ட அசல் கிரைய ஆவணத்தினை என்னிடம் காண்பித்தார். 20.04.1996 தேதியிட்ட அசல் பத்திரத்தினை நான் ஏன் கேட்டு பெறவில்லை என்றால் அந்த பத்திரத்தில் கண்டுள்ள சொத்து 24 பிளாட்டுகளாக பிரிக்கப்பட்டு விட்டதால் அதன் அசல் எல்லாருக்கும் கிடைக்காது என்பதால் என்னால் கேட்டு பெற முடியவில்லை. மேற்படி அசல் ஆவணத்தினை நான் தாக்கல் செய்ய முடியுமா என்றால் அந்த ஆவணம்

யார் வசம் உள்ளது என்று எனக்கு தெரியாது. 20.04.1996 தேதியிட்ட கிரைய ஆவணத்தில் நான் தரப்பினர் அல்ல என்றால் சரிதான். அந்த ஆவணம் தொடர்பாக மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் இருந்து கூடுதல் முத்திரை கட்டணம் செலுத்த வேண்டும் என எனக்கு அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் சரிதான்.

7. இஎம்ஜி சௌந்திரராஜனுக்கு கேரளா மாநிலம் பாறசாலையில் நான் கூறுவதுபோல் ஒரு செண்டு நிலம் இருந்தால்தான் அங்கு 20.04.1996 தேதியிட்ட கிரைய ஆவணத்தினை பதிவுசெய்ய முடியும் என்றால் சரிதான். அவ்வாறு இஎம்ஜி சௌந்திரராஜனுக்கு ஒரு செண்டு நிலம் இருந்ததா என்று மாவட்ட பதிவாளர் அலுவலகத்திடம் இருந்து கேரளா மாநிலம் பாறசாலை சார்பதிவாளர் அலுவலகத்தில் தகவல் கேட்டு எதுவும் பெறவில்லை என்றால் சரிதான். இஎம்ஜி சௌந்திராஜனுக்கு நான் கூறுவது போல் கேரளா மாநிலம் பாறசாலையில் எந்த சொத்தும் இல்லை என்றாலும, ஆகையால் அய்யனார் பெயரில் அங்கு பதிவுசெய்யப்பட்ட 20.04.1996 தேதியிட்ட கிரைய பத்திரம் மோசடியானது என்றால் சரியல்ல. இஎம்ஜி சௌந்திரராஜனுக்கு கேரளா மாநிலம் பாறசாலையில் சொத்தே இல்லாபமல் அங்கு அய்யானர் 20.04.1996 தேதியிட்ட கிரைய ஆவணத்தினை மோசடியாக பதிவுசெய்துள்ளதால் அந்த கிரைய ஆவணத்தினை மதுரை மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் Adjudicate செய்வதற்கு எனக்கு அருகதைஇல்லை என்றால் சரியல்ல. நான், இந்த வழக்கு நடைபெறும் அனைத்து வாய்தாக்களுக்கும் இந்த நீதிமன்றத்திற்கு வந்து சென்றேன் என்றால் 2023ம் ஆண்டு பிற்பகுதியில் இருந்து வந்து செல்கிறேன்.

8. இந்த வழக்கு உள்பட இதோடு இணைந்த மற்ற 12 வழக்குகளுக்கும் வாதிக்கு வழக்கறிஞர் ஏற்படுத்தி கொடுத்து பின்னிருந்து வழக்கினை நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதிக்கு எதிராக நான் நிலஅபகரிப்பு பிரிவில் புகார் கொடுத்திருந்தேன் என்றால் சரிதான். விசாரணைக்கு அவர் ஆஜர் ஆனார் என்றால் சரிதான். நான் சிவில் வழக்கு தாக்கல் செய்யாமல் 2ம் பிரதிவாதிக்கு எதிராக குற்றவியல் நடவடிக்கை எடுத்தேன் என்றால் சரிதான். நான், காவல்துறையினரை வைத்து 2ம் பிரதிவாதியை மிரட்டி எனது மனைவி வைஷ்ணவி கிரையம் பெற்ற சொத்தில் 2ம் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்யக்கூடாது என வாக்குமூலம் பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. எனது மனைவி

கிரையம் பெற்ற கிரைய ஆவணம் மற்றும் அதற்கு முந்தைய கிரைய ஆவணங்கள் மோசடியானவை என 2ம் பிரதிவாதி தரப்பில் ஆட்சேபணை செய்துள்ளார்கள் என்றால் சரிதான்.

9. எனது மனைவி பெயரில் உள்ளகிரைய ஆவணம் மற்றும் அதற்கு முந்தைய கிரைய ஆவணங்கள் உண்மையானவை என அறிவிக்கக் கோரி நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல, உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது. உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு எண்.17665/2014 வழக்கில் எனது மனைவி தரப்பினர் என்றால் சரிதான். அந்த வழக்கில் ஒரு நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டு தாவாசொத்தினை பார்வையிட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்து குறித்து நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்தார். அதில் நானும் கலந்து கொண்டேன் என்றால் சரிதான். இந்த வழக்கு தரப்பினரும் கலந்து கொண்டார்கள் என்றால் சரிதான். **அந்த நீதிமன்ற ஆணையர் அறிக்கை என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ-2 ஆக குறியீடு** செய்யப்படுகிறது.

10. அவ்வாறு நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்த போது அந்த சொத்துக்குள் எனது மனைவி கிரைய் பெற்ற சொத்து இருப்பதாக நீதிமன்ற ஆணையரிடம் தெரிவித்தேன் என்றால் சரிதான். அந்த விவரமும் பி.வா.சா.ஆ-2ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் கட்டுப்பட்ட சர்வே எண்.169/ 1, 169/2 ஆகியவை மைதானமாகவும், விடுதியாகவும் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் சர்வே எண்.169/1 மற்றும் சர்வே எண்.169/2ல் கட்டுப்பட்ட மொத்த விஸ்தீரணமான சுமார் 7 ஏக்கரில் 5 ஏக்கர் நிலம் மட்டும் மைதானமாக இருக்கிறது, மீதமுள்ள 2 ஏக்கர் நிலம் கல்லும், மணலுமாக உள்ளது. அதில் தான் தாவா சொத்தும் உள்ளது. அவ்வாறு பி.வா.சா.ஆ-2 அறிக்கையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ-2 அறிக்கையில் 7ம் பக்கத்தில் 3வது பாராவில் நான் 2ம் பிரதிவாதிக்கு எதிராக காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததன் அடிப்படையில் 2ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த

உறுதிமொழியின் காரணமாக எனது மனைவிக்கு பாத்தியப்பட்டதாக சொல்லப்படும் இடம் குறிப்பிடப்பட்டுள்ளது என காணப்படுகிறது என்றால் சரிதான்.

11. காவல் நிலையத்தில் எழுதிக்கொடுக்கப்பட்ட சொல்லப்படும் உறுதிமொழி செல்லாது என்றாலும், அந்த சொத்தினை பொறுத்து உரிமையை சிவில் நீதிமன்றம் தான் முடிவுசெய்ய முடியும் என்று பி.வா.சா.ஆ-2 அறிக்கையில் சொல்ப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவாசொத்தில் கட்டுப்பட்ட சர்வே எண்ணில் நானோ, எனது மனைவியோ எந்த காலத்திலும் அனுபவத்தில் இருந்ததில்லை என்றால் சரியல்ல. எனது மனைவி கிரையம் பெற்ற சொத்தினை பொறுத்து உரிமையியல் நீதிமன்றத்தில் உரிய பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து எங்களது உரிமையை நிலைநாட்டாமல் 2ம் பிரதாதிகளுக்கு எதிராக காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அவரை கட்டாயப்படுத்தி வாக்குமூலம் பெற்றுள்ளதால் அதன்அடிப்படையில் நாங்கள் எந்த அனுகூலமும் பெறமுடியாது என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும், இந்த வழக்கு வாதிக்கு முகவர் போல் செயல்பட்டு அவர்களோடு சேர்ந்து பிரதிவாதியிடம் பணம் பறிக்கும் நோக்கில் இந்த வழக்கினை நாங்கள் நடத்தி வருகிறோம் என்றால் சரியல்ல.

12. அதனால் தான் இந்த வழக்கில் நான் தரப்பினாராக இல்லாட்டியும் கூட இந்த வழக்கு தாக்கல் செய்தது முதல், தொடர்ச்சியாக வழக்கு தேதிகளில் நீதிமன்றம் வந்து வழக்கின் நடவடிக்கைகளை கவனித்து செல்கிறேன் என்றால் சரியல்ல, தாவா சர்வே எண்களில் வைக்கப்பட்ட சொத்தில் எனது மனைவி கிரையம் பெற்றுள்ளதால் அது சம்பந்தமாக மாண்பமை உயர்நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வந்ததால் இந்த வழக்கு நடவடிக்கைகளை நான் 2023 டிசம்பரில் இருந்து உற்று நோக்கி வந்தேன். நான் பணி ஓய்வுபெற்று வீட்டில் இருக்கிறேன். நான் வழகக்கு தரப்பினர் அல்லாமல் வாதிகளை துாண்டிவிட்டு இந்த வழக்கினை நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் கட்டுப்பட்ட சர்வே எண்களில் எனது மனைவி எந்த காலத்திலும் கிரையம் பெறவில்லை என்றாலும், தாவா சொத்திற்கும் எங்களுக்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல. பி.வா.சா.ஆ-2 ஆவணத்தில் கடைசி பக்கத்தில் உள்ள லேஅவுட்டுகள் இரண்டு இந்த வழக்கு தரப்பினரால் நீதிமன்ற ஆணையரிடம் சமர்ப்பிக்கப்பட்டவை என்றால் சரிதான்,

கடைசி பக்கத்தில் உள்ளலேஅவுட் விஏஓ அலுவலகத்தில் இருந்த கொடுக்கப்பட்டது. மேற்படி லேஅவுட்டுகள் அனுமதி பெறப்படாத லேஅவுட்டுகள் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ-2 ஆவணத்தில் உள்ள புகைப்படத்தில் பிரதிவாதி பள்ளி காணப்படுகிறது என்றால் பள்ளியின் முகப்புமட்டும் காணப்படுகிறது. பிரதிவாதியிடம் இருந்து பணம் பறிக்க வேண்டும்எ ன்ற நோக்கத்தில் வாதிகளை தூண்டி விட்டு வீண் தாவா செய்து வருகிறோம் என்றால் சரியல்ல.